Volume 6 Special Issue 1 November 2024 E-ISSN: 2582-2063

# சமூகத்தால் பாதிக்கப்பட்டு சரித்திரம் படைத்த பெண்கள் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்

**முனைவர் வீ.ரோஜா**
*இணை பேராசிரியர் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர்*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளீர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் 1912ல் நாட்டின் முதல் பெண் மருத்துவராக பட்டம் பெற்றவர். சென்னை எழும்பூர் மருத்துவமனையில் முதல் பெண் மருத்துவராக பணியில் சேர்ந்தார். தேவதாசி ஒழிப்பு சட்டம், விபச்சார ஒழிப்பு சட்டம், பெண்ணின் திருமண வயதை உயர்த்தும் சட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.கி.பி.1917 ஆம் ஆண்டு சென்னை அடையாறில் இந்திய பெண்கள் கழகத்தை தோற்றுவித்து அதன் முதல் இந்திய உறுப்பினராகவும், செயலாளராகவும், பின்னர் வாழ்நாள் முழுவதும் அதன் தலைவராகவும் இருந்து தொண்டாற்றினார். ஸ்திரீ தர்மா (மகளீர் அறம்) என்னும் பெயரில் இதழ் தொடங்கி பெண்கல்வி, தீண்டாமை ஒழிப்பு, இளமை மணத்தின் கொடுமை பற்றியெல்லாம் கனல் தெறிக்கும் கட்டுரைகளை எழுதினார். கி.பி. 1926 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கி.பி.1927 ஆம் ஆண்டு மேலவைத் துணை தலைவராகவும் இருந்து வந்தார். கி.பி.1930 ஆம் ஆண்டு சென்னையில் அவ்வை இல்லம் என்ற விடுதியை நிறுவினார்.*

*மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் தமிழகத்தை சேர்ந்த ஒரு பெண் சமூக சிர்திருத்தவாதியாகவும், ஒரு சிறந்த எழுத்தாளராகவும், தேவதாசி ஒழிப்பு இயக்கத்தில் பங்ககொண்டவராகவும், திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளராகவும் இருந்து வந்துள்ளார. முதலில் 1917 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் தனது போராட்டத்தை துவங்கி தேவதாசி பெண்களிடம் சென்று இந்த இழிவான வாழ்க்கையில் இருந்து விடுபடுங்கள் என்று சொல்லி அவர்களை உறுப்பினர்களாக சேர்த்து "நாகபாசத்தார் சங்கம்" என்ற அமைப்பை ஆரம்பித்தார். இவர் காங்கிரசிலிருந்து விலகி 1925 ஆம் ஆண்டு பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து "குடியரசு" இதழில் அனல் பறக்கும் கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டார். இராமாமிர்தம் அம்மையார் 1930 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் தேவதாசி முறை ஒழிப்பை சட்டமாக்க டாக்டர். முத்துலெட்சும் ரெட்டியுடன் துணை நின்று போராடினார். 1936 ஆம் ஆண்டு வெளியான இவரின் சுயசரிதப் புதினமான "தாசிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர", தாசிகளின் அவலநிலையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது. இவர்கள் இருவரும் நாட்டிற்காக மட்டுமல்லாமல் பெண்ணுரிமைக்காகப் போராடிய வீராங்கனையாக எழுச்சி பெற்று, பெண் சீர்திருத்தவாதியாக இருந்து வந்தார்கள்.*

**முன்னுரை**

பெண்ணியத்தின் உயர்வில்தான் நாட்டின் உயர்வு இருக்கிறது என்று உணர்ந்து நாட்டிற்க்காகவும் பெண்ணியத்தின் உரிமைக்காகவும், உயர்வுக்காகவும் பாடுபட முன்வந்த பெருமாட்டிகள் பலர். அவர்களில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் எஸ்.தர்மாம்மாள், இந்திராணி பாலசுப்பிரமணியம், பண்டிகை அசலாம்பிகை அம்மையார், பண்டிகை கிருஷ்ணவேணி அம்மையார், வீரமங்கை வேலுநாச்சியார், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் போன்றோர் பெண்ணினத்திற்காக பாடுபட்ட சமூக சேவகிகள் ஆவார்கள். அவர்களுள் சமூகத்தால் பாதிக்கப்பட்டு சரித்திரம் படைத்த பெண்களாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் இருந்திருக்கின்றார்கள்.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார்**

**வாழ்க்கை வரலாறு**

மங்கையராக பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்ற கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் வாய்மொழிக்கேற்ப தமிழன்னையின் மாதவப் புதல்வியாக புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் என்ற இடத்தில் 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி பிரபல வழக்கறிஞர் நாராயண சாமி, பாடகர் சந்திரம்மாளுக்கு மூத்த மகளாக பிறந்தார். இவரின் தங்கைகள் சுந்தரம்மாள், நல்லமுத்து மற்றும் தம்பி இராமையா ஆவார்.

பெண்கல்வி மறுக்கப்பட்ட காலத்திலேயே, எதிர் நீச்சல் போட்டு 4 வயதிலேயே திண்ணை பள்ளியிலே தனது பள்ளிபடிப்பை முடித்து, பல பழைமைவாதிகளின் எதிர்ப்புக்கிடையில் 1904 லில் மன்னர் மார்தாண்ட பைரவத் தொண்டைமான் ஆதரவுடன் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் சேர்ந்து படித்தார். 1907 ல் சென்னை மருத்துவ கல்லூரியில் சேர்ந்து படித்து 1912ல் நாட்டின் முதல் பெண் மருத்துவராக பட்டம் பெற்று கர்னல் ஜிப்போர்ட என்ற அறுவை சிகிச்சைத்துறை பேராசிரியரின் நன்மதிப்பை பெற்றார். தன் பெற்றோர்களின் வற்புறுத்தலால் 1914 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மருத்துவராக பணியாற்றிய டாக்டர் சுந்தரம் ரெட்டியாரை பிரம்மசமாஜச் சட்டப்படி மணந்து கொண்டார். இவர்களுக்கு இராம்மோகன், கிருஷ்ணமூர்த்தி என்று இரண்டு மகன்கள். டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அம்மையாரின் கணவர் சுந்தரரெட்டி கி.பி. 1943 ஆம் ஆண்டும், இவர் தனது 82 வது வயதில் கி.பி. 1968 ஆம் ஆண்டும் மறைந்தார்கள்.

**சமூகப் பணிகள்**

டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி முதல் பெண் மருத்துவர் என்ற பட்டத்தை பெற்றவுடன் சென்னை எழும்பூர் மருத்துவமனையில் முதல் பெண் மருத்துவராக பணியில் சேர்ந்தார். லண்டனில் உள்ள செல்சியா மருத்துவமனையில் தாய்சேய் மருத்துவம் மற்றும் புற்றுநோய் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்தார்.

**டாக்டர் முத்துலெட்சுமி அம்மையாரும், தேவதாசி ஒழிப்பு சட்டமும்**

முத்துலெட்சுமி அம்மையாரின் பெருமுயற்சியின் காரணமாக இயற்றப்பட்ட சட்டங்கள் பலவாகும். அவற்றுள் தேவதாசி ஒழிப்பு சட்டம், விபச்சார ஒழிப்பு சட்டம், பெண்ணின் திருமண வயதை உயர்த்தும் சட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

கலைத்துறையில் பெண்கள் ஈடுபடுவது என்பது செய்யத்தகாத பாவகாரியம் போல் பழிக்கப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்டனர். பாட்டு, நடனம், பாடல் போன்ற கலைகளுக்காக சில குடும்பங்கள் ஒதுக்கப்பட்டன. அந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஆண்டவன் சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்கள் தேவதாசிகள் என்று அழைக்கப்பட்டனர். இது போன்ற தேவதாசி முறை இதிகாச காலத்திலேயே இருந்ததாகும். தேவதாசிகளைப் பற்றி மகாபாரத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காலை, மாலை இரண்டு வேளையும் கோயில்களில் இறைவனின் சன்னதியில் ஆடுவது இவர்களது தொழில் ஆகும். இவர்கள் கலைக்குடும்பமாதலால் இவர்கள் நகரத்தில் உள்ள பிரமுகர்கள் வீட்டு விழாக்களில் ஆடவும், பாடவும் அனுமதிக்கப்பட்டனர். இடைகாலத்தில் உயர்வகுப்புப் பெண்கள் கோயில் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. அழகும், இளமையும், கலைஞானமும் பொருந்திய பெண்களுக்கு பொட்டு கட்டி விட்டு விடுவது தேவதாசிகளின் குடும்ப வழக்கமாகும். ஊர் செல்வாக்கு படைத்த பெரிய மனிதர்கள் இந்தப் பெண்களை தவறாக பயன்படுத்தினர்.

தேவதாசிகள் கோயில்களில் பணிப் பெண்ணாகவே இருந்தார்கள். இவர்கள் இசைப்பாடல்களை இசைத்தனர். தேவதாசிகள் பரதம் பயின்று அக்கலையில் வல்லவர்களாக விளங்கினர். இவர்களுக்கு நிலமும்இ நெல்லும் மன்னர்களால் மானியமாக வழங்கப்பட்டது.

அரசின் சார்பாக முதன் முதலாக இம்முறைக்கு ஆதரவு அளிக்க மறுத்தவர் சென்னை ஆளுநராக இருந்த வென்லாக் பிரபுவே ஆவார். இந்த தேவதாசி முறை நீடிப்புக்கு முற்றுபுள்ளி வைத்தவர்கள் தான் டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் அவர்கள் ஆவார்கள்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் அவர்கள் இதற்கான மசோதா ஒன்றினை கி.பி. 1929 ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ம் நாள் தாக்கல் செய்தார். இந்த மசோதா பலத்த விவாதத்திற்கிடையில் நிறைவேறியது. இதன் மீது அப்போதைய காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அவர்கள் பேசுகிறபொழுது தாசிகள் தோன்றியது நம்முடைய காலத்தில் அல்ல. நாமும் அந்த குலத்தை தோற்றுவிக்கவில்லை. வியாசர், பராசரர் காலத்திலிருந்து அந்தக்குலம் வாழ்ந்துகொண்டு வருகிறது.

தாசிகள் கோயில் பணிக்கென்று படைக்கப்பட்டவர்கள். அது சாஸ்திர சம்பந்தமானது. தாசிகளை ஒழித்துவிட்டால் பரத நாட்டியக் கலை ஒழிந்துவிடும். சங்கீதம் அழிந்து விடும். ஆண்டவன் கட்டளையை மீறுவது அடாத செயலாகும். அநியாயமாகும் என்று பேசினார். இவரது மனிதத் தன்மையற்ற இப்பேச்சுக்கு பெரியார் பச்சை பச்சையாக பதிலடி கொடுத்தார். ஒரு குலத்தில் மட்டும் தான் தாசிகள் தோன்ற வேண்டுமா. இது தான் ஆண்டவன் கட்டளையா? மற்றக்குலத்துப் பெண்களும் மாறிமாறி பொட்டுக் கட்டிக்கொள்ளக் கூடாதா என்று பெரியார் வாதங்களை அடுக்கிக்காட்டி தேவதாசி ஒழிப்புச்சட்டத்திற்கு ஆதரவினைத் தேடினார்.

தேவதாசி ஒழிப்பு மசோதாவினை முதலில் சட்டமாக்க முனையாமல் அதன் பேரில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனைகளைக் கிளப்பிப் பொதுமக்கள் கருத்தறிவது என்ற பெயரால் தடையை ஏற்படுத்தி விட்டனர். இது குறித்து கி.பி. 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23- ஆம் நாள் தேவதாசி ஒழிப்புச்சட்டம் என்ற தலைப்பிட்டுத் தந்தை பெரியாரின் குடியரசு என்ற நூல் அருமையானதொரு தலையங்கத்தை வெளியிட்டிருந்தது.

கோயில்களில் பெண்களை பொட்டுக் கட்டுவதைத் தடுக்கச் சட்டம் செய்ய வேணுமாய் திரு.முத்துலெட்சுமி அம்மையார் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தை சர்க்கார் நமக்கு அனுப்பி அதன்மீது நமது அபீப்ராயம் கேட்டிருக்கிறார்கள்.இதற்காக சர்க்கார் பொது ஜனங்களின் அபீப்ராயம் கேட்பது என்பது கோமாளித்தனமானது ஆகும். ஏனென்றால் கோயில்களில் கடவுள் பெயரால் பெண்களுக்குப் பொட்டு கட்டி அவர்களையே பொது மகளிர்களாக்கி நாட்டில் விபச்சாரித்தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும் சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாரளமுமாய் இடமளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் பொட்டுகட்டுவதை ஒழிக்கும் இந்த மசோதாவானது வெகுகாலமாகவே ஜனபிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களில் பொது மாநாடுகளில் கண்டித்து பேசப்பட்டிருப்பதுடன் இம்மாதிரி ஒரு சட்டம் செய்ய அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. இது சம்பந்தமாக ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார் என்றும் பெரியார் பேசினார்.

தேவதாசி ஒழிப்புச்சட்டம் நீதிக்கட்சிக் காலத்தில் பொப்பிலி அரசர் முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். தேவதாசி முறையை ஒழிப்பதற்காகப் பெரிதும் முயன்று பாடுபட்டவர்களில் முத்துலெட்சுமிரெட்டி அம்மையார் அவர்களோடு இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் ஆவார்கள். அவரது இயக்கத்திற்கு ஆதரவாக நீதிக்கட்சியின் தலைவர்களும், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார் அவர்களும், தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களும் ஒத்துழைப்பு நல்கினார்கள். பொதுமக்களிடையே அம்முறையை ஒழிப்பதற்கான கருத்து வளர்ச்சியை உருவாக்கினார்கள். தேவதாசி முறையை ஒழிக்க முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் மிகப்பெரிய கருத்து போர் நடத்தினார். இவருக்கு ஆதரவு நல்க தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் தமது நவசக்தி ஏட்டில் எழுதினார். கூட்டங்களில் பேசினார். இது குறித்து தமது வாழ்க்கைக் குறிப்பு நுலிலும், அம்மையாரைப்பற்றி சிறப்பாக எழுதிச் சென்றுள்ளார்.

ஒரு சமயம் சட்டமன்றத்தில் தேவதாசி முறை ஒழிப்பு பற்றி விவாதம் நடைபெற்றபோது சத்தியமூர்த்திக்கும், முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாருக்கும் சொற்போர் நிகழ்ந்தது. சத்தியமூர்த்தி அவர்கள் தேவதாசி முறை நீடிக்க வேண்டும் என்றும் அது பெருமை மதிப்பு மிக்க பணி என்றும் கூறினார். அப்போது அம்மையார் குறுக்கிட்டு அப்படியானால் அந்த பணிக்கு தங்கள் மகளை அனுப்புவீர்களா? என கேட்டு வாயடக்கினார். பெண்களை இழிவுபடுத்தும் இந்த முறையின் மூலம்தான் பரத நாட்டியத்தை வளர்க்க முடியுமென்றால் அந்தக் கலை இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று ஆணித்தரமாக சட்டசபையில் வாதிட்டார். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் கி.பி.1929 ஆம் ஆண்டு இறுதியாக அந்த சட்டத்தை நிறைவேற்றுவதில் வெற்றியும் கண்டார். தேவதாசிகளுக்கு நல்வாழ்வளிக்க இந்திய சேவா சமாஜத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இத்துடன் மட்டுமல்லாமல் முத்துலெட்சுமி அம்மையார் பால்ய விவாகத்தை - குழந்தை திருமணத்தை தடைசெய்ய கொண்டுவரப்பட்ட சாரதா சட்டத்தை இயற்றுவதில் இவர்தம்

பங்கு போற்றுதற்குரியது. சாரதா ஒற்றுமைக் கழகத்தின் பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா 1927 ஆம் ஆண்டு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் தலைமையில் நடந்தது.

**பிற பணிகள்**

கி.பி.1917 ஆம் ஆண்டு சென்னை அடையாறில் இந்திய பெண்கள் கழகத்தை தோற்றுவித்து அதன் முதல் இந்திய உறுப்பினராகவும், செயலாளராகவும், பின்னர் வாழ்நாள் முழுவதும் அதன் தலைவராகவும் இருந்து தொண்டாற்றினார். ஸ்திரீ தர்மா(மகளிர் அறம்) என்னும் பெயரில் இதழ் தொடங்கி பெண்கல்வி, தீண்டாமை ஒழிப்பு, இளமை மணத்தின் கொடுமை பற்றியெல்லாம் கனல் தெறிக்கும் கட்டுரைகளை எழுதினார். கி.பி.1926 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கி.பி.1927 ஆம் ஆண்டு மேலவைத் துணை தலைவராகவும் இருந்து வந்தார்.

**அவ்வை இல்லம்**

முத்துலெட்சுமி ரெட்டியால் கி.பி.1930 ஆம் ஆண்டு சென்னையில் அவ்வை இல்லம் என்ற விடுதியை நிறுவப்பட்டது. இவ் இல்லம் வறுமை மற்றும் ஏழ்மை காரணமாக குப்பைத் தொட்டிகளில் வீசப்படும் குழந்தைகள், சமூகக் கொடுமைகளுக்கு அஞ்சி, வஞ்சிக்கப் பட்ட பெண்கள் தாம் பெற்ற குழந்தைகளை கொன்றுவிடுவது போன்றவற்றைத் தவிர்க்க உருவாக்கப்பட்டது ஆகும். அது முதலில் சாந்தோமில் அது முதல்ல் சாந்தோமில் உருவாக்கப்பட்டது. பின்னர் அடையாறுக்கு மாற்றப்பட்டது. இந்த இல்லம் எண்ணற்ற பெண்களுக்கு ஆதரவளித்து வருகிறது. பள்ளியொன்றும் உருவாக்கப்பட்டது. அவ்வை இல்லப் பெண்களுக்கு மணமகனைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்யும் பொறுப்பினையும் அது மேற்கொண்டுள்ளது. அதேபோல் முஸ்லீம் பெண்கள் நிறவனம் என்ற அமைப்பும் அவரால் உருவாக்கப்பட்டது.

முத்துலெட்சுமி ரெட்டி கி.பி.1937 முதல் 1939 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சியின் நியமனக் குழு உறுப்பினராக இருந்து வந்தார். கி.பி.1949 ஆம் ஆண்டு சென்னையில் புற்றுநோய் நிவாரண நிதி அமைப்பினை ஏற்படுத்தியுள்ளார். இவர் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல சீர்திருத்தங்களை செய்து பல பெண்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தர். அவர் ஆற்றிய அருஞ்செயலுக்காக 1956 இல் பத்மபூஷன் என்ற பட்டத்தைப் பெற்றார். அவருடைய பணிகள் அனைத்தும் காந்திய கோட்பாடுகளைப் பிரதிபலித்தன. டாக்டரம்மா என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் சமூகப் பணி சாலச் சிறந்த பணியாகும்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் வாழ்வு பெண்குலத்திற்கு ஒரு மாபெரும் பாலமாகத் திகழ்ந்ததால் இவர் உலகை விட்டுச் சென்றாலும் இவருடைய நினைவுகள் நம்மைவிட்டு இன்றும் மறையவில்லை. முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் இன்றும் பெண்ணுரிமையின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

**மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்**

**இராமாமிர்தம் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு**

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் தமிழகத்தை சேர்ந்த ஒரு பெண்சமூக சிர்திருத்தவாதியாகவும், ஒரு சிறந்த எழுத்தாளராகவும், தேவதாசி ஒழிப்பு இயக்கத்தில் பங்கொண்டவராகவும்,திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளராகவும் இருந்து வந்துள்ளார். இவர் திருவாரூர் மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகே உள்ள பாலூர் என்ற கிராமத்தில் இசை வேளாளர் குடுத்பத்தில் 1883 ஆம் ஆண்டு கிருஷ்ணசாமி, சின்னம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவர் மூவலூர் கிராமத்தில் வளர்ந்து வந்ததால் மூவலூர் இராமாமிர்தம் என்று அழைக்கப்பட்டார்.

தேவதாசி முறை நடைமுறையில் இருந்த காலம். தேவதாசி சமூகத்தில் பிறந்த இவர் ஐந்து வயதிலேயே பெற்றோர்களால் கைவிடப்பட்டு தன் தாயால் ஒரு தேவதாசி பெண்ணிடம் 10 ரூபாய்க்கு விற்க்கப்பட்டார். அவர்கள் குல வழக்கமாக ஆடல் பாடல் இசை ஆகியவற்றை

சிறுவயதிலேயே கற்றுத் தேர்ந்தாலும் தேவதாசி முறைக்கு அடிமையாகக் கூடாது என்பதில் மன உறுதியுடன் இருந்தார் இராமாமிர்தம். இவர் பருவம் அடைந்தவுடன் வாழ்க்கை போராட்டம் ஆரம்பித்தது. தேவாதசி முறைக்கு ஒத்துழைக்க மறுத்து விட்டார். அவரை வளர்த்த தாய் அவளை 60 வயதான முதியவருக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய்து விட்டாள். இதை மறுத்த அம்மையார் வீட்டைவட்டு வெளியேறினார். தனக்கு இசையும், நாட்டியமும் கற்று கொடுத்த இளம் வயதினரான சுயம்பு பிள்ளையை திருமணம் செய்துகொண்டார். அதன் பிறகும் அவரை சமூகம் நிம்மதியாக வாழவிடாமல் அவர்மீது கொலைபழி சுமத்தி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதற்கும் இராமாமிர்தம் அம்மையார் தன்னை நிரபராதி என்பதை நிருபித்துக்காட்டினார். பல சீர்திருத்தங்களை செய்த அம்மையார் அவர்கள் 1962 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் நாள் இயற்கை எய்தினார்.

**இராமாமிர்தம் அம்மையாரின் சமூகத் தொண்டு**

இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் தன் கணவரின் துணையுடன் தேவதாசி முறையை ஒழிக்க போராட்டங்களில் ஈடுபட்டார். முதலில் 1917 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் தனது போராட்டத்தை துவங்கி தேவதாசி பெண்களிடம் சென்று இந்த இழிவான வாழ்க்கையில் இருந்து விடுபடுங்கள் என்று சொல்லு அவர்களை உறுப்பினர்களாக சேர்த்து "நாகபாசத்தார் சங்கம்" என்ற அமைப்பை ஆரம்பித்தார். இதனால் பல செல்வந்தர்களின் எதிர்ப்புக்களை சந்தித்தார். இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளராக இருந்தபோது காங்கிரசில் இருந்த சிலர் தேவதாசி முறைக்கு ஆதரவாக இருந்ததால் இவர் காங்கிரசிலிருந்து விலகி 1925 ஆம் ஆண்டு பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து "குடியரசு" இதழில் அனல் பறக்கும் கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டார். இராமாமிர்தம் அம்மையார் 1930 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் தேவதாசி முறை ஒழிப்பை சட்டமாக்க டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டியுடன் துணை நின்று போராடினார். 1936 ஆம் ஆண்டு வெளியான இவரின் சுயசரிதப் புதினமான தாசிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர், தாசிகளின் அவலநிலையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது.

பின்னர் 1937 முதல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டு 1938 ல் கைதுசெய்யப்பட்டு ஆறு வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வும், மேற்க்கொண்ட பிரச்சாரங்களும் 1947 ஆம் ஆண்டு சென்னை தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற வழிவகுத்தது. 1949 ல் பெரியாருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு திராவிட கழகத்திலிருந்து விலகி சி.என்.அண்ணாதுரை ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளராக இருந்தார். இவர் அறிஞர் அண்ணா அவர்களால் தழிழகத்தின் அன்னிபெசன்ட் என அழைக்கப்பட்டார். 1989 ஆம் ஆண்டு அம்மையாரின் நினைவாக தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தை கொண்டு வந்தது இளம் பெண்களின் திருமண நிதியாக ரூபாய் 15000 வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் பெண்களின் அடக்கு முறைக்கும், பால்ய விவாகம், தேவதாசி முறை, தீண்டாமை ஆகிய கொடுமைகளுக்கு எதிராக போராடினார்கள். இவர் தேவதாசி சமூகத்திலே பிறந்து, அதனால் பாதிப்படைந்து, அந்தக் கேடுகெட்டப் பழக்கத்தையே ஒழித்து கட்டும் வரை ஓயாது உழைத்து அதில் வெற்றியும் கண்டவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

**முடிவுரை**

இவர்கள் இருவரும் தேவதாசி முறையை ஒழிக்கபாடுபட்டது மட்டுமல்லாமல் பெண்ணுரிமைக்காகப் போராடிய வீரமங்கையர்களாக எழுச்சிப் பெற்று, பெண் சீர்திருத்தவாதியாக இருந்து, இன்று பெண்ணுரிமையின் விடிவெள்ளியாகத் திகழ்கின்றார்கள். இவர்கள் மறைந்தாலும் இவர்கள் பெண்களுக்காக செய்த சீர்த்திருத்தங்கள என்றும் நம்மால் மறக்க முடியாத மங்கையர்களாக இன்றும் நம் மனதில் நீங்கா இடம்பெற்று இருந்து வருகிறார்கள்.

**மேற்கோள்கள்**

1. நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு. (2007). *சரித்திரம் படைத்த சாதனைப் பெண்மணிகள்.* ராஜகுமாரி பப்பிளிகேசஷன்.
2. குமரவேலன், இரா. (1981). *இந்திய சமுதாய சீர்திருத்தச் செம்மல்கள்.* தமிழ்நாடு அரசு முதல் வெளியீடு.
3. திருநாவுக்கரசு, க. (1983). *திராவிட இயக்க வேர்கள்.* மணிவாசகர் பதிப்பகம்.
4. திருவேங்கிமலை சரவணன். (2008). *மறக்க முடியாத மங்கைகள்.* குமுதம் புத்தகம் வெளியீடு.
5. Muthulakshmi Reddy, S. (1928). *Awakening Demand for Devadasi Legislation*.
6. Chattapadhaya, K. (1983). *Indian Women's Battle for Freedom*. Abhinav Publications.
7. Muthulakshmi Reddy, S. (1964). *Autobiography of Mrs. S. Muthulakshmi Reddy.*
8. ராஜா முகமது, ஜெ. (1992). *புதுக்கோட்டை மாவட்ட வரலாறு.* புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம்.
9. ஸ்டாலின் குணசேகரன், த. (1998). *தேசவிடுதலையும் தியாகச் சுடார்களும்.* கற்பகம் புத்தகாலயம்.
10. Sarkar, S., & Sarkar, T. (2008). *Women and Social Reform in Modern India: A Reader*. Indiana University Press.
11. Krishna Raj, Maithreyi (2000). *Ideals, Images, and Real Lives: Women in Literature and History*. Sameeksha Trust.
12. Kannabirān, K., & Kannabiran, V. (2003). *Muvalur Ramamirthammal's Web of Deceit: Devadasi Reform in Colonial India*.
13. Viswanathan, S. (2008). The pioneers: Dr. Muthulakshmi Reddy. *Frontline.*